ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/20 - 2020 ජූනි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.06.25

*2181/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*பிரதேச செயலாளர் குறிப்பு இல.: ஹங்கு/பிசெ/3/2/1/82.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2008/IR/172.*

குருகல் ஓய நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் பொருட்டு அவசியமான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

நுவரெலியா மாவட்டத்தின், ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவின் கன்னேவ கோரளை, இல. 500 பி, மெதகம கிராம அலுவலர் பிரிவின், மெதகம எனும் கிராமத்தில் மு. பீ. நு. 3397ஆம் ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டு இல. 1 முதல் 6 ஆக நிலஅளவை மேற்கொள்ளப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. 01**
காணியின் பெயர் : பதலேகொட்டுவ கும்புர; உரிமை கோருபவர்: எஸ். எச். பியசீலி, பல்லேபோவல, மெதகம; விஸ்தீரணம் : (0 ஏக்கர், 0 றூட், 10.2 பேர்ச்) 0.0259 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 02**
காணியின் பெயர் : பதலேகொட்டுவ கும்புர; உரிமை கோருபவர்: டி. ஜீ. குணதிலக்க, பல்லேபோவல, மெதகம; விஸ்தீரணம் : (0 ஏக்கர், 0 றூட், 13.1 பேர்ச்) 0.0331 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 03**
காணியின் பெயர் : பதலேகொட்டுவ கும்புர; உரிமை கோருபவர்: டி. ஜீ. குணதிலக்க, பல்லேபோவல, மெதகம; விஸ்தீரணம் : (0 ஏக்கர், 0 றூட், 31.3 பேர்ச்) 0.0791 ஹெக்டயார்.

*04.* **துண்டு இல. 04**
காணியின் பெயர் : பதலேகொட்டுவ கும்புர; உரிமை கோருபவர்: டி. ஜீ. குணதிலக்க, பல்லேபோவல, மெதகம; விஸ்தீரணம் : (0 ஏக்கர், 1 றூட், 18.6 பேர்ச்) 0.1483 ஹெக்டயார்.

*05.* **துண்டு இல. 05**
காணியின் பெயர் : பதலேகொட்டுவ கும்புர; உரிமை கோருபவர்: எஸ். எச். பியசீலி, பல்லேபோவல, மெதகம; விஸ்தீரணம் : (0 ஏக்கர், 0 றூட், 32.6 பேர்ச்) 0.0824 ஹெக்டயார்.

1A - G 32386 - 57 (2020/06)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

06. **துண்டு இல. 06**

காணியின் பெயர் : பதலேகொட்டுவ கும்புர; உரிமை கோருபவர்: எஸ். எச். பியசீலி, பல்லேபோவல, மெதகம; விஸ்தீரணம் : (0 ஏக்கர், 0 றூட், 16.8 பேர்ச்) 0.0425 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு ஹங்குரான்கெத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர். உரிமை கோரல் தொடர்பான உறுதிப்பத்திரங்கள் போன்றவை விசாரணையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஐ. எம். சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
ஹங்குரான்கெத்த.

பிரதேச செயலகம்,
ஹங்குரான்கெத்த,
2020, யூன் 24.

7 - 279

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-31/1/எ. உ. நியமனம்/2020.
எனது இல.: மக/கா/எ/CEB/385.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2165/23 ஆம் இலக்க மற்றும் 2020.03.04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட எனது அறிவித்தலில் உரித்துத் தேடுதல் இடம்பெறும் திகதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த 2020.03.28 எனும் திகதியானது 2020.07.15 ஆகவும் எழுத்துமூலத் தகவல்களை சமர்ப்பிக்கும் திகதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த 2020.03.20 எனும் திகதியானது 2020.07.08 ஆந் திகதியாகவும் திருத்தம் செய்யப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

எம். எம். கே. தில்ருக்ஷி வல்பொல,
பிரதேச செயலாளர்/காணி எடுத்தல் அலுவலர்,
மகரகம.

பிரதேச செயலகம்,
மகரகம,
2020, யூன் 07.

7 - 280

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: டீ.எச்.ஓ/எல்ஏஎன்/ஏ.சீ.கியூடீ என்/ஏ3/2/13.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/13/2010/HA/241.

2020.05.29 ஆந் திகதிய இல. 2177/18 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் விசாரணைத் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

09 ஆம் பிரிவின் நேர்முகப் பரீட்சைத் திகதி, நேரம் :
2020, யூலை 29 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு.
நட்ட ஈடு தொடர்பான விண்ணப்பங்கள் முன் வைக்கும் திகதி :
2020.07.15 ஆந் திகதி.

யூ. பீ. சந்தன அநுருத்த பியதாச,
பிரதேச செயலாளர்,
தெஹிஓவிட்ட.

பிரதேச செயலகம்,
தெஹிஓவிட்ட,
2020, யூலை 24.

7 - 282

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: டீ.எச்.ஓ/எல்ஏஎன்/ஏ.சீ.கியூடீ என்/ஏ3/2/7.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/15/2016/வீஈ/265.

2020.05.29 ஆந் திகதிய இல. 2177/18 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் விசாரணைத் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

09 ஆம் பிரிவின் நேர்முகப் பரீட்சைத் திகதி, நேரம் :
கிளாசல் தோட்டம் : 2020, யூலை 29 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு.
நட்ட ஈடு தொடர்பான விண்ணப்பங்கள் முன் வைக்கும் திகதி :
2020.07.15 ஆந் திகதி.

யூ. பீ. சந்தன அநுருத்த பியதாச,
பிரதேச செயலாளர்,
தெஹிஓவிட்ட.

பிரதேச செயலகம்,
தெஹிஓவிட்ட,
2020, யூலை 24.

7 - 283

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: டீ.எச்.ஓ/எல்ஏஎன்/ஏ.சீ.கியுரீஎன்/ஏ3/2/6.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/15/2016/வீஈ/264.

2020, மே மாதம் 29 ஆந் திகதிய 2177/18 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் விசாரணைத் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

09 ஆம் பிரிவின் நேர்முகப் பரீட்சைத் திகதி, நேரம் :
வூட்டென்ட் தோட்டம் : 2020.07.29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு.
நட்ட ஈடு தொடர்பான விண்ணப்பங்கள் முன் வைக்கும் திகதி : 2020.07.15 ஆந் திகதி.

யூ. பீ. சந்தன அநுருத்த பியதாச,
பிரதேச செயலாளர்,
தெஹிஓவிட்ட.

பிரதேச செயலகம்,
தெஹிஓவிட்ட,
2020, யூலை 24.

7 - 292